பக்கங்கள்: எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 18 புதன்கிழமை (02-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 212

# பிரயாணிகள் கப்பல் பேசாலையில் எரிப்பு!

## 9 சிப்பந்திகளும் கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 2

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கும் மன்னாருக்கும் பயணிகள் மற்றும் அகதிகளை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துக் கப்பல்களில் ஒன்றான 'எம். வி. மிஷன்' நேற்றுக்காலை மன்னார் பேசாலைக் கடற்பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது. கப்பலில் இருந்த ஒன்பது சிப்பந்திகளும் அவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளே இக்கப்பலை எரித்ததாக அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் இக்குற்றச்சாட்டை உடனடியாகப் புலிகள் நிராகரித்து விட்டதாக புலிகளின் லண்டன் அலுவலகத்தை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

கப்பலின் கப்டனின் பெயர் என். ஏ. என். ஜி. ஹட்ஜ். சிரேஷ்ட் பொறியிலாளர் ஐ. எம். ஏ. எம். வஹுடி. இவர்கள் இருவரும் இந்தோனேஷியா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

இவர்களும் கப்பலில் பணியாற்றிய மற்றும் ஏழு இலங்கைச் சிப்பந்திகளும் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஏழு பேரில் ஐவர் சிங்களவர். ஒருவர் தமிழர். மற்றவர் முஸ்லிம்.

அந்த ஏழு பேரில் ஐவரின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. விவரம் வருமாறு;- எஸ். கே. தேனுவர, எம். எம். ஆர். புஸ்பகுமார, ஜே. எம். டயஸ், எல். எவ். பெரேரா, ஏ. என் எம். முஸ்தாபா.

கொழும்பிலிருந்து இயங்கும் நியூக்கோ கம்பனி லிமிட்டெட் என்ற நிறுவனத்துக்கு இக்கப்பல் சொந்தமானது.

இந்தக் கப்பலையும், 'நியூக்கோ எண்டியூரண்ஸ்' என்ற மற்றொரு கப்பலையும் இந்த நிறுவனம் சிங்கப்பூரில் உள்ள ஒரு கப்பல் நிறுவனத்திடம் இருந்து பெற்று பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுத்தி வந்தது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவைகள் ரத்து

யாழ்ப்பாணம், ஜூலை 2

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் சேவை இடம் பெறமாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் —

திருகோணமலையில் இருந்து நேற்று மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட விருந்த நியூகோ எண்டியூரன்ஸ்' கப்பல்சேவையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் —

இக்கப்பலில் செல்ல திருகோணமலைத் துறைக்கு வந்த 77 பயணிகளும் ஏமாற்றத்துடன் திரும்பினர் என்றும் —

திருகோணமலைச் செய்தியாளர் அறிவிக்கிறார்.

(உ-150-3)

## மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி!

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத மன்னார் பகுதியில், மன்னார் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுக் காலை ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தியது.

மன்னார் பாலம்பிட்டியில் இருந்து நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பித்த பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றியதாக 'புலிகளின் குரல்' அறிவித்தது.

தச்சனா மருதமடுவைப் பேரணி அடைந்த சமயம், வான் படை விமானங்கள் தாழப்பறந்து, குத்திப்பதிந்து தாக்குதல் நடத்தும் பாணியில் அச்சுறுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது.

தச்சனா மருதமடுவிலுள்ள அகதிகளுக்கான ஐ நா. தூதரக அலுவலகத்தைப் பேரணி அடைந்த சமயம், தச்சனா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் பலி

மட்டக்களப்பு ஜூலை 2

அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10-30 மணி தொடக்கம் சுமார் முப்பது நிமிட நேரம் அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கி சமரில் புலிகளின் உள்ளூர் தலைவரான ஆனந்தன் என்பவர் உயிரிழந்தாக அறிவிக்கப்படுகின்றது.

(உ-3-21)

### ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்திய வழக்கில்

# 'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர் குற்றவாளிஎனநேற்றுத்தீர்ப்பு

### ஒத்திவைக்கப்பட்ட 1½ வருடச் சிறையும் அபராதமும்

கொழும்பு, ஜூலை 2

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு அவதூறு ஏற்படும் வகையில் செய்தி வெளியிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் சிங்க ரட்ண துங்க குற்றவாளியாக காணப்பட்டார்.

மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி டி இஸட் குணவர்த்தனா நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

இரண்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும்—

அவற்றுக்குத் தண்டனையாக ஏழு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருடச் சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிப்பதாகவும்—

நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவதூறு விளைவித்தார் என்ற ஒரு குற்றத்துக்கு ஏழு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடச் சிறையும், 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

பிழையான தகவலை பத்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### மீசாலையில் இளைஞர் பலி!

சாவகச்சேரி, ஜூலை 2

மீசாலை மேற்கு டச்சு வீதியில் — விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கு முன்பாக — நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சடலம் நேற்றுக்காலை படையினரால் எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிய வந்தது. (உ-31)

### வன்னி ஆர்ப்பாட்டம் ஒத்தி வைப்பு

வவுனியா, ஜூலை 2

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சரிவர அனுப்பப்படாததைக் கண்டித்து புதுக்குடியிருப்பில் இன்று நடைபெற ஏற்பாடாகி இருந்த பொதுசன ஆர்ப்பாட்டப் பேரணி நாளை மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-164)

### 14 முஸ்லிம்கள் சடத்தப்பட்டனர்

திருகோணமலை மாவட்டம் குச்சவெளிப்பகுதியைச் சேர்ந்த 14 முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் நேற்று கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-21)

### சுட்டுக் கொலை

கடந்த திங்களன்று உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்ற மார்க்கண்டு குமார் என்பவர் அப்பகுதியில் மறைந்திருந்த படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (உ-164)

### மன்னிப்புச்சபை கண்டனம்

மனித உரிமைகள் செயலணிக் குழுவைக் கலைப்பது என ஸ்ரீலங்கா அரசு செய்துள்ள முடிவை சர்வதேச மன்னிப்புச்சபை கடுமையான வார்த்தைகளால் கண்டித்திருப்பதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

(உ-164)

### பணிக் காலம நீடிப்பு

மனித உரிமை செயலணிக் குழுவை கலைப்பது எனத் தீர்மானித்துள்ள ஸ்ரீலங்கா அரசு அதன் பணிக்காலத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பது என தற்போது முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

ஜூலை 31ஆம் திகதி வரை செயலணிக் குழுவின் பணிக்காலம் நீடிக்கப்பட்டிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார் (உ-21)

## செய்திச் சாரம்

### கரும்புலி தின நிகழ்வுகள்

வவுனியா ஜூலை 2

எதிர்வரும் சனிக்கிழமை வரும் கரும்புலி தினத்தை ஒட்டி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதி எங்கும் விசேட சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக 'புலிகளின்குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது. (உ-164)

### வன்னியில் திங்கள் இரவு தாக்குதல்

வவுனியா, ஜூலை 2

'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது திங்கள் இரவு 9.30 மணியளவில் புலிகள் தாக்குதல் முயற்சி ஒன்றை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் பின்னர் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றிரவு இச் செய்தி எழுதப்படும் வரை வவுனியாவில் இருந்து படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னியின் வடக்குப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து — இடைவிடாது — ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

(உ-3-163)

### பால் வியாபாரி உயிரிழப்பு

மட்டக்களப்பு ஜூலை 2

மட்டக்களப்பு மாவட்டம் வத்தாறு மூலைப் பகுதியில் நேற்று படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில் சிக்குண்ட பால்வியாபாரியான செல்லையா அருணாநிதி (வயது38) என்பவர் உயிரிழந்தார்.

(உ-21)

### கூட்டு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 2

விடுதலைப் புலிகளின் நிலைகளை அழித்தொழிக்கும் நோக்குடன் இராணுவத்தினரும், பொலிஸாரும் நேற்று வாழைச்சேனை, கிரான், பறங்கியாமடு ஆகிய பகுதிகளில் கூட்டு நடவடிக்கை ஒன்றை மேற்கெண்டனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(உ-3)

### ஒட்டுசுட்டானில் பஸ் விபத்து

வவுனியா, ஜூலை 2

நேற்றுக் காலை புதுக்குடியிருப்பிலிருந்து மாமுனை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று புதுக்குடியிருப்பு — ஒட்டுசுட்டான் வீதியில் பித்தம்வேலி என்ற இடத்தில் விபத்துக்கு உள்ளாளாகியதில் பத்துப் பயணிகள் காயமடைந்தனர்.

(உ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்

றோட்டரக்ற் கழகம்

3 ஆவது பதவியேற்பு வைபவம்

இடம்: இராமநாதன் கல்லூரி

காலம்: 02-07-97 புதன் பிற்பகல் 2.30 மணி

பிரதம விருந்தினர்: Rtn. எஸ். சோதிலிங்கம்
(தலைவர், யாழ். றோட்டரிக் கழகம்)

கௌரவ விருந்தினர்: Rtn. கே. ஸ்ரீபதி
(செயலர், யாழ். றோட்டரிக் கழகம்)

Rtr. ரி. வாமதேவன்
(தலைவர், சுன்னாகம் றோட்டரிக் கழகம்)

(சி/1050)


## முதல் திருப்பலி



திரு: திருமதி மரியாம்பிள்ளை அருளானந்தம் தம்பதிகளின் புதல்வன்

### அருட் திரு. ஞானநேசன் அருளானந்தம் அடிகள்


(நற்கருணை நாதர் சபை)

26 - 06 - 1996 இல் கொழும்பு மறைக் கோட்டத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின் சொந்த ஊரான பருத்தித்துறையில், புனித தோமையார் ஆலயத்தில் முதல் திருப்பலி நிறைவேற்ற 02 - 07 - 1997 காலை 8-30 மணிக்கு வருகை தருகின்றார். இவர் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

பருத்தித்துறை பங்கு மக்கள்.

பருத்தித்துறை. (சி-1048)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



### ப. இராமலிங்கம்

எம் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. எம்மால் நம்ப முடியவில்லை. இன்னும் சில காலம் எம்முடன் இருப்பீர்கள் என நினைத்திருந்தோம். திடீரெனப் போய் விட்டீர்கள். உங்கள் திடீர் பிரிவால் துயரக்கடலில் மிதக்கிறோம். ஆதரவற்ற நிலையில் வாடி நிற்கிறோம். உங்கள் திரு உருவம் எம் மனக் கண் முன் தோன்றி கண்ணீரை வரவழைக்கிறது: ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வல்லிபுரக்குறிச்சி,
புலோலி. (சி/1047)

## சிவில் அலுவலகத்தில் கிடந்த பேர்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். சிவில் நிர்வாக அலுவலகப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஞானப்பிரகாசம் என்பவரின் பேர்ஸ் சிவில் அலுவலகத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் செல்வதற்காக விண்ணப்பம் கையளித்த பட்டியல் இலக்கம் 626 அட்டையும் 500 ரூபா பணமும் அந்தப் பேர்ஸில் இருப்பதாகவும் —

சம்பந்தப்பட்டவர் தமது அடையாளத்தை உறுதி செய்து அதைப் பெற்றுக் கொள்ளுமாறும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலக பொறுப்பாளர் கேட்டுள்ளார். (இ-3)

## ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

'யுனெஸ்கோ' ஆதரவுடன் நடைபெறவிருக்கும் பாடசாலையை விட்டு விலகியோருக்கான ஆங்கில வகுப்புக்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கின்றன.

ஏற்கனவே மேற்படி கல்லூரி அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்கள் இந்த வகுப்பில் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## பரிசளிப்பு

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நல்லூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. அருளம்பலத்தின் ஞாபகார்த்த நினைவுச்சின்னமாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து நீர் பெறும் தொடக்க விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடை பெறவிருக்கிறது.


வேலணை மணி கல்வி நிறுவனம்

வங்களாவடிச் சந்தி,
செருக்கன் சந்தி.

ஆண்டு 6 முதல்
A/L வரை
(கலை, வர்த்தகம்)

கிளை நிறுவனம்:
செருக்கன்சந்தியில்

ஆரம்பம்: 04-07-97
பிற்பகல் 3 மணி
(48153)



கணக்காய்வு பரீட்சகர், பரீட்சார்த்திகள் கவனத்துக்கு

உங்களிற்கு
"வழிகாட்டும் கைநூல்"

முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தபாலில் மட்டும் தொடர்பு:-

NEAR TEACHER
(தபால் மூலம் கல்வி)
186/22,
குருநாதர் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1049)


# மரண அறிவித்தல்கள்

## மயிலுப்பிள்ளை கந்தையா

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் மின்சார திணைக்களம்)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட மயிலுப்பிள்ளை கந்தையா 30.06-97 அன்று வட்டுக்கோட்டை பழைய ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், இந்திராதேவி (கொழும்பு), காலஞ்சென்ற சுலோசனாதேவி (மீசாலை), சாந்தினிதேவி (யாழ், பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராசா (மீன்பிடி கைத்தொழில் அமைச்சு), செல்வராசா (சவுதி), சந்தியானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், சுகிஸ்வரன் சதீஸ்வரன், பிரசாந்தன், பாமினி, தர்மினி, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01- 07- 97 செவ்வாய்க் கிழமை அன்று நவாலி வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ச. சாந்தினிதேவி (மகள்)
ச. சத்தியானந்தன் (மருமகன்)

வட்டுக்கோட்டை. (48133)

## அருட்சகோதரி மேரி பேர்ணாடா றோகர், H. C.

REV. SISTER
MARY BERNHADA ROHER, H. C.

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி பேர்ணாடா றோகர் H.C கொழும்பில் 29.06.1997 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் திருச்சிலுவைக் கன்னியர்கள் பொறுப்பேற்று, மருத்துவப் பணிபுரிந்த காலம் முழுவதும் 1963 ஆம் ஆண்டு வரை மேற்றனாகப் பணியாற்றினார்கள். அதன் பின் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் சமயப் பணியாற்றி, தமது 89 வருட வாழ்வில் 67 வருடங்கள் துறவியாக வாழ்ந்து பணியாற்றினார்.

இவரின் சாட்சிய வாழ்வுக்கும், பணிக்கும் இறைவனுக்கு நன்றி கூறி இவரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திப்போம்.

தகவல்:
திருச்சிலுவைக் கன்னியர்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

(48139)

## சரவணமுதது பாலசுப்பிரமணியம

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், செட்டிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் 8-06-1997 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (கிளாக்கர்) — பேரின்பம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி —சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் (கனடா), அன்புக் கணவரும், கௌரி (கனடா), சுதாகரன் (கனடா), யசோதா (கனடா), சுபாஸ்கரன் (கனடா), சுவித்திரா (கனடா), பிரபாகரன் (கனடா), உமா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி (இந்தியா), இராசஇராசேஸ்வரி (யாழ்ப்பாணம்), திருச்செல்வம் (கனடா), நவராசசிங்கம் (சுவிஸ்), யோகேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சனின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ.பசுபதி
(மைத்துனர்)

"செல்வராச பவனம்",
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி. (48146)

## திருமதி மகாலட்சுமி தெட்சணாமூர்த்தி

சங்கானை ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகக் கொண்ட மகாலட்சுமி தெட்சணாமூர்த்தி 27-06-97 இல் கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் சீ.தெட்சணாமூர்த்தி (முன்னாள் கொழும்பு மருத்துவக் கல்லூரி ஆய்வு கூடம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜீவஜோதி, சிவநேசன், சிவயோகேஸ்வரி, சிவசங்கரி (ஜேர்மன்), சிவராமலிங்கம் (ஓமான்), சிவறஞ்ஞனா (இப்பால் மகா வித்தியாலயம், வவுனியா), சிவலோஜனா (மத்திய வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியநாதன், லோகநாயகி, தவபாஸ்கரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனனி, மயூரன், சர்ஜினி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 301, முத்துவெல மாவத்தை முகத்துவாரத்தில் நடைபெற்று கனத்தை மயானத்தில் 1-07-97 இல் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
M.சயந்தன்
(மருமகன்)

201, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம். (48145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொங்கொங் மக்களின் சுயாட்சி பேணப்படும்

## சீனத் தலைவர்கள் வாக்குறுதி

ஹொங்கொங், ஜூலை 2

''கொங்கொங் மக்கள் தற்பொழுது அனுபவித்து வரும் சுயாட்சி, தொடர்ந்து பேணப்படும். அடுத்த ஆண்டு நடைபெறப் போகும் தேர்தலில் ஹொங்கொங் மக்கள் தமக்குத் தேவையான ஆட்சி மன்றத்தையும் அதற்கான தலைவரையும் தெரிவு செய்ய முடியும்.''

பிரிட்டனிடமிருந்து ஹொங்கொங் கைப் பொறுப்பேற்ற பின்னர் உரை நிகழ்த்திய சீன ஜனாதிபதி ஜியாங் செமின், ஹொங் கொங்கின் விசேட நிர்வாகப் பிராந்தியத் தலைவர் சி. எச். துங் ஆகியோர் மேற் கண்டவாறு ஹொங்கொங் மக்களுக்கு உறுதி அளித்தனர்.

ஹொங்கொங் மக்கள் தமது பொருளாதார — அரசியல் சுதந்திரங்களைத் தொடர்ந்து அனுபவிக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதே சமயம் சீனாவில் இருந்து 4 ஆயிரம் செஞ்சேனை வீரர்கள் நேற்று ஹொங் கொங்குக்குள் பிரவேசித்தனர்,

படைகளை ஹொங்கொங்குக்குள் அனுப்புவதில் சீனா அவசரம் காட்டுவதாக ஏற்கனவே பிரிட்டனும் மற்றும் சில மேற்கு நாடுகளும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஹொங்கொங் கையளிப்புத் தொடர்பாக பி. பி. சி. தனது கண்ணோட்டத்தில் ''சூரிய அஸ்தமனம்'' என்ற ஹொங்கொங் கையளிப்பு வைபவம் பிரிட்டிஷ் இராணுவம் மற்றும் சீனப் பாரம்பரியம் இரண்டும் கலந்த சடங்காக இருந்தது'' என்று தெரிவித்தது.

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் ஹொங்கொங் கையளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போது பிரிட்டிஷ் தேசியக் கொடி கீழ் இறக்கப்பட்டு பிரிட்டிஷ் நிர்வாகப் பொறுப்பு முடிவுக்கு வந்தபோதிலும் ஹொங்கொங்கில் இருந்து பிரிட்டன் நிரந்தரமாக விடைபெறப் போவதில்லை என்று தெரிவித்தார்.

ஹொங்கொங்கில் குடியிருக்கும் மக்களில் 35 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பிரிட்டிஷ் குடிமக்கள் ஆவர்.

ஹொங் கொங்கில் இருந்து ஆயிரக் கணக்கான இளம் ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு ஆண்டும் பிரிட்டன் சென்று படிக்கின்றனர். நாங்கள் ஒரே மொழியையும் ஆங்கிலேய பொதுச் சட்டத்தையும் பகிர்ந்து கொள்கிறோம்.

ஹொங் கொங் வரலாற்றின் ஓர் அங்கமாக பிரிட்டன் உள்ளது. அதே போல பிரிட்டிஷ் வரலாற்றின் ஓர் அங்கமாக ஹொங் கொங் உள்ளது என்றார்.

இந்த வைபவத்தை யொட்டி ஹொங் கொங் நகர் முழுவதும் செங்கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. சுமார் 5 இலட்சம் மக்கள் இந்த வைபவத்தில் நேரடியாகக் கலந்து கொண்டனர்.

ஹொங் கொங்கில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டது குறித்து தெற்காசிய நாடுகள் மாறுபட்ட உணர்வலைகளை வெளியிட்டுள்ளன.

அதிகார பூர்வமாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகள் அனைத்தும் சீனத்தலைவர்களுக்கு அனுப்பிய செய்தியில் ஹொங் கொங் சீனாவிடம் கையளிப்பதை வரவேற்றுள்ளன. (இ-4)

# அல்பேனியத் தேர்தலில் எதிர்க்கட்சியினர் வெற்றி

அல்பேனிய நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்த்தரப்பு சோசலிச கூட்டணி வெற்றி பெற்றுள்ளது,

நாடாளுமன்றத்தில் 115 இடங்களில் 60 இடங்கள் தங்கள் கூட்டணிக்குக் கிடைத்ததாக சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் லேனோ தலைநகர் தெரேனாவில் கூறினார்.

விகிதாசார அடிப்படையில் இன்னும் 20 இடங்கள் கிடைக்கும் என்றும் - அல்பேனியாவில் ஒருகட்சி ஆட்சியும் ஒரு நபர் ஆதிக்கமும் உடைந்து விட்டன என்றும் - அவர் குறிப்பிட்டார்.

சாளி பரிஷா என்பவர் 5 ஆண்டுகளுக்கு முன் அல்பேனியாவின் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

கடந்த நான்கு மாதங்களாக அங்கு வன்செயல்களும் குழப்பங்களும் நீடித்தன. கலவரங்களில் சுமார் 1500 பேர்வரை இறந்துள்ளனர். தற்பொழுது நடைபெற்ற தேர்தல் மூலம் அல்பேனியாவில் அமைதி திரும்பும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (இ)

## குண்டு வெடிப்பில் பாகிஸ்தானில் எண்மர் பலி!

பாகிஸ்தானில் பஸ் ஒன்றில் குண்டு வெடித்ததில் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டனர்.

இந்திய எல்லைக்கு அருகில் உள்ள சியோல் கோட் என்ற நகரத்தில் நடந்த இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வேறு சில பயணிகளும் படுகாயமடைந்தனர்.

இதற்கிடையில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் ஷியா மற்றும் சுனி முஸ்லிம் தீவிரவாதப் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற பல கொலைச்சம்பவங்கள் தொடர்பாக 500 க்கும் அதிகமானோரை பஞ்சாப் மாநிலப் பொலீஸார் கைது செய்தனர். இவர்களில் 100க்கும் குறைவானோர் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக் கிழமை லாகூரில் சுனி மதப் பிரிவினரின் பள்ளிவாசல் ஒன்றை இனந்தெரியாத துப்பாக்கிதாரர்கள் தாக்கிய போது 4 பேர் கொல்லப் பட்டார்கள். (இ-4)

## ஜப்பான் விஜயம்

பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா 6 நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ளார்.

பங்களாதேஷில் ஜப்பானிய முதலீடுகளை அதிகரிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர் ஜப்பானியப் பிரதமருடன் பேச்சு நடத்துவார்.

பங்களாதேஷுக்கு ஜப்பான் பெருமளவு உதவிகளை வழங்கி வருகிறது. (இ)

சக்திவாய்ந்த கச்சிதமான
நம்பகரமான
"டென்யோ"
ஜெனரேட்டர்




கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்
★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-
★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்
★ 2 கேவிஏ பெற்றோருபால் 45, 000-/
கிடைக்குமிடம்:
N. M. L. TRADERS
என். எம். எல். டிரேடர்ஸ்
85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8
தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500737
(சி/842)

ஹோலிபீல்ட்டின் காதைக் கடித்த

# மைக் ரைசன் மன்னிப்புக் கேட்டார்!

லாஸ்வெகாஸ், ஜூலை 2

லாஸ் வெகாஸில் நடைபெற்ற அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டியில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஹோலி பீல்ட்டின் காதைக் கடித்ததுக்காக மைக்ரைசன் மன்னிப்புக் கோரி உள்ளார்.

தாம் போட்டியில் தோல்வி அடையப் போவதாகத் தெரிந்தவுடன் தமக்குத் தெரியாமலேயே ஹோலி பீல்ட்டின் காதைக் கடித்துவிட்டதாகவும்—

உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வைத்திய சிகிச்சை பெறப் போவதாகவும் — இந்தப் போட்டியின் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் மைக்ரைசன் தெரிவித்தார்.

கற்பழிப்புக் குற்றச் சாட்டின் பேரில் ஏற்கனவே சிறைவாசம் அனுபவித்த மைக்ரைசன், தற்போதைய சம்பவம் காரணமாக வாழ்நாள் முழுவதும் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்ள முடியாதவாறு தடுக்கப்படலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி நடைபெற்ற உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் ரைசனை தோற்கடித்து வெற்றி பெற்றிருந்தார் ஹோலிபீல்ட்.

மற்றும் ஒரு தோல்வியைத் தவிர்ப்பதற்காக ஹோலி பீல்ட்டின் இரு காதுகளையும் அவர் கடித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஷியா முஸ்லிம்கள் ஊர்வலம் நடத்த முயற்சி

## லக்னோவில் பதற்றம்

உலக அரங்கில்

புதுடில்லி, ஜூலை 2

முகமது நபிகள் நாயகத்தின் பேரன் ஹஸரத் இமாம் ஹுசேய்னின் மரணம் தொடர்பான ஊர்வலம் ஒன்றை ஷியா முஸ்லிம்கள் நடத்த முயன்றதை அடுத்து லக்னோவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

லக்னோ நகரில் ஷியா மற்றும் சுனி மதப் பிரிவினரிடையே முன்னர் ஏற்பட்ட பிரச்சினைகளால் கடந்த 20 ஆண்டுகளாக இது போன்ற ஊர்வலங்கள் தடைசெய்யப் பட்டிருந்தன.

இந்த ஆண்டு இந்தத்தடை உத்தரவை மீற ஷியா முஸ்லிம்கள் முற்பட்டதில் கடைகளும் வேறு சொத்துக்களும் சூறையாடப்பட்டு எரிக்கப் பட்டன. நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஊர்வலத்துக்கு தலைமை வகிக்க இருந்த தலைவர்களில் ஒருவரான மௌலானா கல்வேஜ் ஜவார் என்பவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சி. பி. ஐ. தலைவர் பதவி மாற்றம்

புதுடில்லி, ஜூலை 2

இந்திய அரசு நாட்டின் முக்கிய புலனாய்வு நிறுவனமான மத்திய புலனாய்வுத் துறையின் (சி. பி. ஐ) தலைவர் பதவியில் மாற்றம் செய்துள்ளது. தற்போதைய தலைவர் கொகேந்திரசிங்குக்கும் பதிலாக ஆர். சி. சர்மா என்பவர் நியமிக்கப்படுவார்.

பிரதமரின் நேரடிக்கட்டுப்பாட்டிலுள்ள சீ. பி. ஐ தற்போது முக்கிய அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ள பல முக்கிய ஊழல்கள் குறித்து விசாரணை செய்து வருகிறது.

இன்ரர்போல் எனப்படும் சர்வதேச பொலீஸ் அமைப்பின் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக கொகேந்திரசிங் தற்போது பரீஸ் நகரில் உள்ளார். (இ-4)

விற்பனைக்கு

லமினேற்றிங் மெஷின், போட்டோஸ்ரட் ரோணர் வகைகள், லமினேற்றிங் கவர் வகைகள், றேடியோ, ஓடியோ, வீடியோ, கசட் வகைகள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(48143)

B. A, B. COM.
(Part - I + II)
பொருளியல், அரசறிவியல்,
மெய்யியல்
வினாத்தாள் பற்றிய விசேட விரிவுரைகள்
ஆரம்பம்: 05 - 07 - 97
காலம்:- சனி, காலை 8-00 மணி பிற்பகல் 3-00 மணி
போதனை கல்வி நிலையம்
இல: 106 B, கைலாச பிள்ளையார் கோயிலடி,
நல்லூர். (48125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் தாம் புரிந்துணர்வுடன் செயற்படுவதாக ஹிஸ்புல்லா தகவல்

## பதவி பறிபோனாலும் கவலை இல்லையாம்

கொழும்பு, ஜூலை 2

''தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கு இடையில் இன மோதல்களை தவிர்க்கும் சூழ்நிலையை ஏற்படுத்தவும்—

மாவட்டத்தின் அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொள்ளவும் — விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுகிறேன். இக்காரணங்களுக்காக எனது பதவி பறிக்கப்பட்டாலோ, மாற்றப்பட்டாலோ கவலைப்படப் போவதில்லை''

தபால், தொலைத்தொடர்பு, தொடர்புசாதன பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளில் 3 பிரதேச செயலர் பிரிவுகள் மட்டும் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஏனைய 9 பிரதேச செயலர் பிரிவுகளிலும் விடுதலைப் புலிகளின் அனுசரணையுடனேயே சமுர்த்தி திட்டம் அமுல்செய்யப் படுகிறது.

இன்றைய யுத்த நிலைபரத்தை நோக்கும்போது விரைவில் முடியும் சூழ்நிலை காணப்படவில்லை. இதற்காக பிரச்சினைகளையும், அபிவிருத்தியையும் பின்போடமுடியாது. ஆகவேதான் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக புலிகளுடன் புரிந்துணர்வுடன் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கிறோம்.

செய்மதி மூலம் செயற்படும் தொலைபேசி வசதி புலிகளிடம் உள்ளது. ஆனால் அத்தகைய தொலைபேசி வசதி எம்மிடம் இல்லை. நான் புலிகளுக்கு செய்மதி மூலம் செயற்படும் தொலைபேசி வழங்கியதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை.

அரசியல் தீர்வு விடயத்திலும் புலிகளின் ஆலோசனை பெறப்படவேண்டும். புலிகளின் சம்மதம் இல்லாத காரணத்தாலேயே இலங்கை- இந்திய ஒப்பந்தம் தோல்விகண்டது. அரசியல் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் கூட புலிகளின் ஆதரவின்றி அதனை அமுல்படுத்தவோ அல்லது அமைதி நிலையை ஏற்படுத்தவோ முடியாது.

அதுமட்டுமல்ல, விடுதலைப் புலிகளை குறைவாக எடைபோடுவது உகந்ததல்ல. இன்று இராணுவம் எவ்வளவு இழப்புகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவற்றைக் கூறுவதால் நான் அரசுக்கு எதிரானவன் என்ற கருத்து அல்ல. எனது பிராந்திய மக்களின் உணர்வுகள், பிரச்சினைகளை எடுத்துக் கூறி தீர்வு காண தீவிர கவனம் செலுத்துகிறேன்.

இவ்வாறு செயற்பட முற்படும்போது என் மீது சுமத்தப்படும் பழிகள் குறித்தோ அதனால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புக்கள் குறித்தோ நான் கவலைப்படப் போவதில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3-21)

# கிராமிய அஞ்சல் சேவை நடத்த சிக்கன கூட்டுறவுச் சங்கம் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிராமிய அஞ்சல் சேவை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சேவையை ஆரம்பிப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்யும் பணி தற்சமயம் நடைபெறுகிறது.

இந்த அஞ்சல் சேவை நிலையத்தை ஆரம்பிக்க தபால் திணைக்களத்தில் ஒரு லட்சம் ரூபா வைப்புச் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# யுனெஸ்கோ நடத்திய இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

அண்மையில் 'யுனெஸ்கோ, அமைப்பு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்திய இலக்கியப் போட்டிகளில் தென்மராட்சி, பளை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் போட்டி முடிவுகள்வருமாறு:-

**பேச்சுப் போட்டி**

**பிரிவு -1**

★ 1ஆம் இடம் செல்வி மு. அபிராமி (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்)

★ 2ஆம் இடம் — செல்வி ப. ஜனனி (கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)

★ 3ஆம் இடம் — செல்வி ஸ்ரீ காயத்திரி (மீசாலை விக்கினேஸ்வரா மகா. வித்.)

**பிரிவு -2**

★ 1ஆம் இடம் — சி. சிவாகுலன் (மறுவன்புலவு சகலகலாவல்லி வித்.)

★ 2ஆம் இடம் — செல்வி கி. இளம்பிரியா (எழுதுமட்டுவாள் அ. த. க. பா.)

★ 3ஆம் இடம் — து. ஐங்கரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**பிரிவு -3**

★ 1ஆம் இடம் — செல்வி யோ. நிர்மதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

★ 2ஆம் இடம் — பொ. வினோத் (அல்லாரை அ. த. க. வித்.)

★ 3ஆம் இடம் — செல்வி கு. கசிதா (றிபேக் கல்லூரி, சாவகச்சேரி)

**பிரிவு -4**

★ 1ஆம் இடம் — செல்வி சி. சிவதர்சினி (கச்சாய் அ. த. க. பாடசாலை)

★ 2ஆம் இடம்— ந. காந்தரூபன் (விடத்தற்பளை கமலாசினி வித்.)

★ 3ஆம் இடம் — செல்வி இ. வாசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்.) ச. பிரதீப் (எழுதுமட்டுவாள் கணேசா வித்.)

**பிரிவு -5**

★ 1ஆம் இடம்— இ. இராகுலன் (பளை மத்திய கல்லூரி)

★ 2ஆம் இடம் — செல்வி க. கலைவாணி (வீரசிங்கம் மகா. வித். மீசாலை)

★ 3ஆம் இடம் — க. குகதாசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**ஆங்கில பேச்சுப் போட்டி**

**பிரிவு -5**

★ 1ஆம் இடம் — செல்வி க. செந்தில்மதி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**நடனப் போட்டி(திறந்த போட்டி)**

★ 1ஆம் இடம் — பளை மத்திய கல்லூரி.

**நாடகப் போட்டி(திறந்த போட்டி)**

★ 1ஆம் இடம் — கச்சாய் அ. த. க. பாடசாலை.

★ 2ஆம் இடம் — சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

★ 3ஆம் இடம் — கைதடி குருசாமி வித்தியாலயம்.

**வினாவிடைப் போட்டி**

**(4ஆம் 5ஆம் பிரிவு கூட்டாக)**

★ 1ஆம் இடம் — செல்வி ப. பிறேமலதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

★ 2ஆம் இடம் — செல்வி இ. கமலேஸ்வரி (மீசாலை விக்கினேஸ்வரா மகா. வித்.)

★ 3ஆம் இடம் — செல்வி ப. தாரணி (பளை மத்திய கல்லூரி)

**கவிதைப் போட்டி பிரிவு -5**

★ 1ஆம் இடம் — செல்வி க. மயூரதி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

★ 2ஆம் இடம் — செல்வி கோ. இராகினி(கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்.)

★ 3ஆம் இடம் — [illegible] சுடரோன் (றிபேக் கல்லூரி சாவகச்சேரி)

(ஐ)

## சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணார்பண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 3 மணிக்கு அபிஷேகமும், 4 மணிக்கு விசேட பூசையும், 5 மணிக்கு சுவாமி உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

(இ)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை 18 தினங்கள் நடைபெறும்.

21 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(இ-103)

★ ★ ★

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய10 ஆம் நாள் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை சங்காபிஷேகம் நடைபெற்று பிற்பகல் அழகிய பூச்சப்பறத்தில் விநாயகப் பெருமான் வீதி உலா வருதலும் இடம் பெறும்.

(இ-4)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு இடம்பெறும்.

(இ-4)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் [illegible] தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(இ-3)

# ஜி. சீ. ஈ. உயர்வகுப்பு மாணவருக்கு இரண்டாவது பயிற்சிப் பரீட்சை

பருத்தித்துறை, ஜூலை 2

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்களுக்கான இரண்டாவது மாதிரி வினாத்தாள் பரீட்சையை தொண்டமானாறு வெளிக்கள நிலையம் விரைவில் நடத்தவுள்ளது.

சென்ற மாதம் முதலாவது பரீட்சை நடைபெற்றது தெரிந்ததே.

யாழ். கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் இப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

பாடசாலை அதிபர்கள் இதற்குத் தேவையான வினாத்தாள்களின் எண்ணிக்கையைப் பாடரீதியாகக் குறிப்பிட்டு தலைவர், தொண்டமானாறு வெளிக்கள நிலையம், கோட்டக் கல்வி அலுவலகம், பருத்தித்துறை என்ற விலாசத்துக்கு இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-118)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம், கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகராகப் பல வருடங்கள் கடமையாற்றிய டாக்டர் எம். தங்கராஜா வடக்கு—கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

(இ-5)


## போட்டோஸ்ரட்

உங்கள் முக்கிய ஆவணங்களைத் தெளிவாகவும், விரைவாகவும் உங்கள் தேவைக்கு ஏற்ற அளவுகளில் போட்டோஸ்ரட் செய்து கொள்வதற்கும் அடையாள அட்டை உட்பட அனைத்து ஆவணங்களையும் லமினேசன் செய்து கொள்வதற்கும்

**சித்ராலயா**

**172, ஸ்ரான்லி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- தவிர்க்கமுடியாத காரணத்தால் எமது புகைப்பட சேவை உடன் ஆரம்பமாகவில்லை என்பதனையும், மீண்டும் ஆரம்பமாகும் பொழுது அறியத்தருவோம் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை.

(48138)



வலி. கிழக்கு

வடபகுதி பல நோ. கூ. சங்கம்

அச்சுவேலி

## கிளை முகாமையாளர் பதவி

**(தற்காலிகம்)**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை 21 — 40 வரை

சம்பளம் வேலை செய்யும் நாளொன்றுக்கு ரூபா 70/-

பிணை ஆதனப்பிணை 15,000/-

பிணை ரொக்கப்பிணை 10,000/-

விண்ணப்ப முடிவு திகதி **15 - 07 - 1997** நண்பகல் 12.00 மணி வரை.

கல்வித் தகைமை: க பொ.த சாதாரணதரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூய கணிதம்/ தமிழ்பாஷை/ என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரு வருட காலத்தின் பின் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கூ. சே. உள்ள

பொது முகாமையாளர்

(சி/1045)


## இதய அஞ்சலி

கிளிநொச்சி மாவட்ட நீதிபதியும்

மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய

திருவாளர்

**குமாரசாமி ஜெயராஜதேவா**

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மல்லாகம் மாவட்ட, ஆரம்ப நீதிமன்ற ஊழியர்கள்.

(48140)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு ஊழியருக்கு புதிய சம்பளத் திட்டம்

## தயாரிக்கக் குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஜுலை 2 கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு புதிய சம்பளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. இச்சம்பளத் திட்டம் குறித்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மிக விரைவில் தீர்மானம் மேற்கொள்ளவிருக்கிறது.

யாழ். கூட்டுறவுச் சபை தூதுக்குழுவிடம் மேற்கண்டவாறு உறுதி அளிக்கப்பட்டுள்ளது:

யாழ். கூட்டுறவுச் சபைத் தூதுக்குழு ஒன்று அண்மையில் கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இத்தூதுக்குழு கொழும்பிலும் திருகோணமலையிலும் கூட்டுறவுத்திணைக்கள உயரதிகாரிகள் புனர் வாழ்வு அமைச்சுச் செயலர் இலங்கை கூட்டுறவுச் சபைத்தலைவர் உட்படப் பலரைச் சந்தித்து யாழ். மாவட்டத்தில் கூட்டுறவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்து விளக்கியது.

பேச்சுக்களின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் சில வருமாறு!-

★ யாழ்.மாவட்ட ப.நோ. கூ. சங்க தேவைகளுக்கு 25 லொறிகள் நன் கொடையாக வழங்கப்படும்.

★ கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் உணவுப் பொருள் விநியோகத்தில் ப. நோ. கூ. சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ கூட்டுறவுச் சங்கங்கள் கடன் பெறும் வழிகள் இலகுவாக்கப்படும்.

★ பலகோடி ரூபா சொத்துக்களை இழந்த ப.நோ.கூ. சங்கங்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்க முயற்சி எடுக்கப்படும்.

★ கூட்டுறவுக் கல்விவளர்ச்சிக்கு உதவி வழங்கப்படும்.

(இ-3)

## சம்பள உயர்வு இன்னும் இல்லை

இவ்வருடம் ஜனவரிமாதம் தொடக்கம் வழங்குவதாக வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு ஆறு மாத காலமாகியும் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் துணை மருத்துவ சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்கள்; மத்திய தர தொழில் நுட்ப வியலாளர்கள், மருந்தாளர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், குடும்ப நல சேவையாளர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வழங்கப்படவில்லை.

மேற்கண்ட அலுவலர்களின் சம்பளத் திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டு வருகின்ற போதிலும், ஆறு மாத காலமாக. இதுபற்றி ஓர் அறிவிப்பும் இது வரை வெளியிடப்படாதிருப்பது குறித்து மேற்கண்ட அலுவலர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-135)

## சுன்னாகம் றோட்டரக்ட் பதவி ஏற்பு

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் 3 ஆவது பதவி ஏற்பு வைபவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சிறப்பு விருந்தினராக, யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் றொட்டேரியன் எஸ். சோதிலிங்கம் கௌரவ விருந்தினராக யாழ். றோட்டரிக் கழகச் செயலாளர் றொட்டேரியன் கே. சிறீபதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# ரூ. 271 லட்சம் செலவில் சீனித் தொழிற் சாலை

## சுன்னாகத்தில் நிறுவ முயற்சி

சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.

சுமார் 271 லட்சம் ரூபா செலவில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள திட்ட அறிக்கை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப. தெ. வளம்) கா. பரநிருபசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது—

அடுத்தவருடம் செயற்படவிருக்கும் இத்திட்டத்துக்கான முதலீட்டில் 60 சதவீதமான தொகை அரசாங்க, அரச சார்பற்ற அமைப்புக்களிடம் இருந்தும்-

மீதமான 40 சதவீத தொகை சங்கத்தில் இருந்தும்— பெறப்படவிருக்கிறது

நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லீற்றர் பதநீரைப் பயன்படுத்தி 25 ஆயிரம் கிலோ சீனியை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# எழுதுநராக மேலும் 7 பேருக்கு நியமனம்

1995 ஆம் ஆண்டு நடந்த பொது எழுது வினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து 7 பேருக்கு நேற்று முன்தினம் முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெறுபவர்களை உடனடியாக யாழ். செயலகத்தில் சமுகமளித்து நியமனக் கடிதங்களைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு;-

★ கே. அனுசியா — தோட்ட வளவு, வதிரி, கரவெட்டி.

★ ஒ. சுமதி — 556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ சே. கலைச்செல்வி — அம்மன் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி

★ கே. வனிதா— தாமரை வாசா, துன்னாலை தெற்கு.

★ எஸ். திவாகரன் — தச்சன் தோப்பு பிள்ளையார் கோயிலடி, கரவெட்டி மத்தி.

★ ஏ. சுமதி — 30/1, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை.

★ கே. சுஜாதா — கல்வயல், சாவகச்சேரி.

(இ-3)

## பதவி உயர்வு

யாழ். மாவட்டத் தபால் அத்தியட்சகராக பணியாற்றிய அ. க. சிவஞானசுந்தரம் தபால் திணைக்களத்தின் சிரேஷ்ட நிர்வாகச் செயலாளராக பதவி உயர்வு பெற்று வட மத்திய மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

(இ-4)

# படித்து விட்டுப் பல வருடங்களாக வேலையற்றிருக்கும் பட்டதாரிகள்

## நாட்டின் சமூக, அபிவிருத்தித் துறைகளுக்கு இவர்களால் பெரும் இழப்பு

**யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக 400 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்று இருக்கிறார்கள். இவர்களது பிரச்சினைகள் குறித்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் ந. விஜயசுந்தரம் இக் கட்டுரை மூலம் விளக்குகிறார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக 400-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எதுவித வேலை வாய்ப்புமின்றிக் காலத்தைக் கழிக்கின்றனர்.

வளர்முக நாடுகளில் வேலையின்மை என்பது பாரிய பிரச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், ஒரு நாட்டில் பட்டதாரிகள் வருடக்கணக்கில் வேலையின்றிக் காலத்தைக் கழிப்பது, நாட்டின் சமூக, பொருளாதாரத் துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். இந் நிலையைத்தான் இன்று நாம் யாழ்ப்பாணத்தில் காணமுடிகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அண்மைக் காலங்களில் குறைந்தது ஐந்து பகுதிகளுக்குத் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளார்கள்.

எனினும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இந் நிலையில்தான் வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிணைந்து தமக்கென ஓர் அமைப்பை ஏற்படுத்தினர்.

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் கூடிய 300-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் நோக்குடன் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை அமைத்தனர். இச் சங்கத்தின் மூலம் தாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்தனர்.

### எதிர் நோக்கும் பிரச்சினைகள்

யாழ்ப்பாணத்துமண் எவ்வளவோ கஷ்டமான சூழ்நிலையிலும் தனது அடிப்படை மூலதனமான கல்வியைக் கைவிடவில்லை; கல்வியில் தொய்வு ஏற்படுகின்ற போதெல்லாம் அறிஞர் பெருமக்கள் குரல் கொடுத்து அதை நிவர்த்திக்கப் பெரும் பாடுபடுவது வெளிப்படையான உண்மை.

யுத்த நிலைமைகள் மட்டும் தான் கல்வியைப்பாதிக்குமெனக் கூறமுடியாது. கஷ்டப்பட்டுப் படித்துப் பட்டம் பெற்ற ஒரு பட்டதாரி மூன்று நான்கு வருடங்களாக அறையினுள் முடங்கிக் கிடக்கும் நிலையும், கல்வி கற்றுக் கொண்டிருக்கும் நம் வருங்கால சந்ததியின் ஊக்கத்தை உற்சாகத்தைத் தளர்த்தி விடும்.

யாழ்ப்பாணத்தில் வேலையின்றி இருப்பதால் ஒருவர் சமூக, பொருளாதார நிலையில் பாதிப்படையும் அதே நேரம் பாதுகாப்பு விடயத்திலும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலையில் வீதிகளில் துணிவுடன் செல்வதற்கு ஒன்று வேலை இருக்க வேண்டும் அல்லது மாணவனாக இருக்க வேண்டும். இந்த இரண்டும் கெட்ட நிலையில் தான் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கிறார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலும் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்ற போதிலும் வடபகுதியிலுள்ளவர்களின் நிலைமை வேறுபட்டதாகும்,

### தென் பகுதிப் பட்டதாரிகளும் வட பகுதிப் பட்டதாரிகளும்

இலங்கையின் தென்பகுதிகளிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளினதும் வடபகுதியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளினதும் நிலைமை வேறுபட்டவை ஆகும்.

அவற்றை ஒன்றாக நோக்குவது தவறானது. தென் பகுதியைப் பொறுத்தவரை அங்கு தனியார் கம்பனிகள், மக்கள் கம்பனிகள், வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் போன்ற ஏகப்பட்ட அமைப்புக்கள் உண்டு அதில் அவர்கள் வேலை வாய்ப்புப் பெற வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் தென்பகுதி பட்டதாரிகள்வேலைசெய்யாவிடினும் கம்பியூட்டர் பயிற்சி, பட்ட மேற்படிப்புகள் போன்ற பல்வேறு உயர் கல்விகளில் தம்மை ஈடுபடுத்த முடியும்.

ஆனால் வடபகுதியிலுள்ள பட்டதாரிகளுக்கு இங்குள்ள தனியார் நிறுவனங்கள் வழங்கக் கூடிய அதி உயர் வேலையில் எழுதுவதாகவே இருக்க முடியும்.

இவ்வாறு எந்த வளமுமற்ற நிலையில் ஆண்டுக் கணக்கில் பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதை சாதாரண பிரச்சினையாக எவரும் கருத முடியாது.

### பயிலுநர் நியமனம்

பொதுவாகப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கும் போது ஆரம்பத்தில் பயிலுநர்' என்ற அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படுகின்றன. 1994 ஆம் ஆண்டு பயிலுநர் நியமனம் பெற்ற பட்டதாரிகளில் சிலர் மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் நிரந்தரமாக்கப்படாத நிலையில் உள்ளனர்.

இதேகதிதான் இனிமேலும் தொடரும். பட்டம் பெற்று வேலைக்காக நான்கு ஐந்து ஆண்டுகள் காத்திருக்கும் அதே வேளை நிரந்தர நியமனத்திற்கும் நான்கு ஆண்டுகள் செல்லுமாயின் ஒருவர் பல வருடங்களை தனது சேவைக் காலத்திலிருந்து தானம் செய்து விடுகிறார்.

### வங்கி நியமனங்கள்

அண்மையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு மக்கள் வங்கியில் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நியமனங்களை வயது எல்லையைத் தளர்த்தி வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு வழங்கிஇருக்கலாம்.

இக் கருத்தானது வேலை பெற்ற மாணவர்களுக்கு எதிரானதல்ல.

நியமனங்கள் எப்போதும் யதார்த்த சிந்தனையில், பக்கச் சார்பற்ற நீதி நெறியில் மேற்கொள்ளப்படுவதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் லண்டனில் நிலவிய பிரபுத்துவ ஆட்சி யாழ்ப்பாணத்தில் உள்வர வாய்ப்பளிக்கும்.

### திணைக்கள வெற்றிடங்கள்

எமது பகுதித் திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச உயர் மட்டங்களிலிருந்து அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று பத்திரிகை வாயிலாக அறியமுடிகிறது. பட்டதாரிகளுக்கு ஏற்புடையதான வெற்றிடங்கள் திணைக்களங்களில் காணப்படும் பட்சத்தில் அவற்றை நிரப்புவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

குறிப்பாகக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை இப் பட்டதாரிகள் மூலம் நிரப்புவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் தேவை ஆகும்.

இது விடயங்களில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர்கள், வடக்கு — கிழக்கு மாகாண சபையினர், அறிஞர் பெருமக்கள், திணைக்களத் தலைவர்கள் அதிக சிரத்தை கொண்டு வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குமுனைப்புடன் செயற்பட வேண்டுமென்பது யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பணிவான வேண்டுகோள் ஆகும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய காது கேட்கும் கருவியும், 26'' TR- 389 EM கறுப்பு - வெள்ளை T.V யும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து. விக்னேஸ்வரன், அச்சுவேலி - வல்வை றோட், சைக்கிள் கடை, அச்சுவேலி. (48114)

ஒரு மாத பேட்டுக்கோழிக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கே. வி. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [48127]

ஒரு மாத ''சேவர்'' (Shaver) பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 22-07-97 இல் (செவ்வாய்க்கிழமை) விற்கப்படும். முன் கூட்டியே தொடர்பு கொள்வது வரவேற்கத்தக்கது. கே. வி. சாமி. 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [48128]

கிறைண்டிங்மெஷின் அலர் (அரிசிதீட்டும்) கிறைண்டர் பிளேற் (14'') வீட்டுத் தளபாடம், 20'' சொனி T.V விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 117, சிவப்பிரகாசம் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [47299]

### தவறிவிட்டது

செல்வராசா மயூரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், பாடசாலை அடையாள அட்டையும் சுன்னாகம் ரயில் நிலையத்திற்கும் பழநி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிந்து மருந்தகம், சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (48130)

இளையதம்பி செல்லத்தம்பி என்பவரின் குடும்ப அட்டை பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ, பத்மநாதன், இலங்கை மின்சாரசபை, 115, பிறவுண் வீதி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (48135)

### கண்டெடுக்கப்பட்டுள்ளன

நாகலிங்கம் சிவதிருச்செந்தூர்நாதர், கைதடி மேற்கு, கைதடி என்பவருடைய விசேட அடையாள அட்டையும், உத்தியோக அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ராசேந்திரம் மதுபானசாலை, நாச்சிமார் கோயிலடியில் வந்து பெற்றுக் கொள்ளவும். (47300)

## விசேட அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 2 ஜே/66 ஈச்சமோட்டை கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். (இ)

## ACCOUNTING

திரு. பாலவாசன்

**A/L 97**

வருமானச் செலவுக் க/கு

**06 - 07 - 97**

ஞாயிறு 7. 00 A. M.

**SHAMROCK**

(48134)

---

உ

சாவகச்சேரி சங்கத்தானை

அருள்மிகு

## ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்

# தேர்த் திருவிழா

**03 - 07 - 97 வியாழன் காலை**

காலை 6. 30 மணி — சங்காபிஷேகம்
காலை 7. 45 '' — வசந்தமண்டப பூஜை
காலை 9. 30 '' — ஆறுமுகசுவாமிப் பெருமான் தேரில் ஆரோகணம்
பகல் 11. 00 '' — சுவாமி தேரில் இருந்து அவரோகணம்
பகல் 12. 00 '' — சண்முக அர்ச்சனை - வழிபாடு
பகல் 12. 30 '' — விழா பூர்த்தி

பிரதம சிவாச்சாரியர் ''சிவாகமவித்பத் ஜோதி''
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

அனைவரும் தேர்த்திருவிழாவில் கலந்து அருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

**ஆலய பரிபாலன சபை**

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:
செ. சபாரத்தினம பத்தர்

## தங்க மாளிகை

இல. 118, கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/1043)

---

# SUBRA கல்வி நிறுவனம் சித்தன்கேணி

மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## O/L மாலை நேர வகுப்பு

பிரிவு II

★ குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை.
★ கடந்த கால (20 ஆண்டு) வினா துரித மீட்டல்.
★ பயிற்சிப் பரீட்சை,
★ உங்களது திறமைச் சித்திக்கு எங்களது உத்தரவாதம்.
★ மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.

**ஆரம்பம்: 05 - 07 - 97 பி. ப. 5.00 மணி.**

நிர்வாகி.

(48110)

---

# 35 ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி ஞானரத்தினம் கனகரத்தினம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05—02—1918 | 29—05—1997 |

உயிரூட்டுவித்த தாயே!
அறிவேற்றுவித்த விளக்கே!
வழிகாட்டி மறைந்தாய் நீயும்
நாம் வாழும் மட்டும் மறையா உனதன்பு!

உங்கள் பிரிவால் துயருறும்:
பொ. கனகரத்தினம் J.P (கணவர்)
மற்றும் குடும்பத்தினர்.

நிம்மதி
தேவாலய வீதி,
சங்கானை.

(48112)

---

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கப்

# பொதுக்கூட்டம்

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் **06—07—1997** ஞாயிற்றுக் கிழமை காலை **10-00** மணிக்கு (புதியநேரம்) அதிபர் ந. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் வடலியடைப்பில் தற்காலிகமாக கல்லூரி இயங்கும் இடத்தில் நடைபெறும்.

புதிய செயற்குழு தெரிவு செய்யப்படுவதுடன் கல்லூரி சம்பந்தமாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் இடம் பெறும். தயவு செய்து பழைய மாணவர்கள் அனைவரும் இதில் பங்குபற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும்படி மிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

வே. சண்முகலிங்கம்
சபா. நாராயணன்
இணைச் செயலாளர்கள்

(48121)

---

# மனோகரன் அன்ட் வெற்றிவேல்

எமது நிறுவனம் மீண்டும் கட்டட அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பதை யாவரும் அறிவர். கடந்த காலத்தில் நாகவிகாரைக்கு எதிரில் அமைக்கப்பட்டிருக்கும் யாத்திரிகர் விடுதி எம்மால் ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

இதன் காரணமாகத் தற்போது ஆரம்பிக்கப்பட இருக்கும் நாகவிகாரை அமைப்பு வேலையிலும் எமது நிறுவனம் ஈடுபடக் கூடும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. எமக்கு இவ்வேலையில் எதுவித ஈடுபாடும் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மனோகரன் அன்ட் வெற்றிவேல்
49 A, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

சு. கி. மனோகரரூபன்
நிருவாகப் பங்காளர்
மனோகரன் அன்ட் வெற்றிவேல்

(48132)

---

# நீங்கா நினைவில் ஓராண்டு



## செல்வன் வேலு சனகன்

(தெல். / யூனியன் கல்லூரி மாணவன்)

| அன்னை மடியில் | அமரன் அடியில் |
|---|---|
| 21—02—1977 | 13—06—1996 |

**திதி: 02 - 07 - 1997**

ஆண்டொன்று கழிந்ததோ
அருமை முகம் மறைந்ததோ
ஈன்றகளை தீரவில்லை
இனியமுகம் காணவில்லை
அப்பா என்று அழைத்த
அருமையின்று அகன்றதோ
அம்மா என்று அணைத்த
ஆசையின்று மறைந்ததோ
அக்காமார் இருவருன்னை
அன்புசெய்தும் ஆற்றாமல்
தங்கையவள் தவித்தழவும்
தரணிவிட்டுச் சென்றனையோ?
''நீண்ட துயர் மாறவில்லை - நினைத்தேடி
அழுகின்றோம்!'

உன் பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரிகள்

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(47302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நியாயமற்ற மூடு விழா

மனித உரிமைகள் செயலணிக்குழு (பணியகம்) கடந்த திங்கட்கிழமை மூடப்பட இருந்தது. இது குறித்து விசேட வர்த்தமானி மூலம் அரசாங்கம் முன்னேற்பாடாகவே அறிவித்து விட்டது.

நாட்டில் மனித உரிமைகள் அரச இயந்திரத்தாலும் ஏனைய தனிப்பட்டவர்கள், நிறுவனங்களாலும் மீறப்படுவதை நோக்கினால், அதனைத் தடுக்க, பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேண இரண்டல்ல பத்து நிறுவனங்கள் இயங்கினாலும் போதாது; ஆகையால் மூடப்படும் பணியகத்தை மனித உரிமைகள் தேசிய ஆணைக்குழுவின் ஓர் அலகாக அல்லது உப பிரிவாக இயங்க வகை செய்திருக்கலாம்.

மனித உரிமைகள் மீறப்படும் பிரதேசங்களில் ஒன்றாக யாழ்ப்பாணமும் மிக வெளிச்சமாக இனங்காணப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்படும் மக்கள் படும் துன்ப, துயரங்களை நீக்குவதற்கு, உடனுக்குடன் நிவாரணம் அளிப்பதற்கு எந்த வகையான வசதியும் செய்யப்படவில்லை.

உதாரணமாக; கைதான ஓர் இளைஞனின் பெற்றோர் தமது பிள்ளை எங்கு வைக்கப்பட்டுள்ளான் என்ற அடிப்படைத் தகவலைக் கூட பல வாரங்கள் சென்றும் அறியமுடியாதிருக்கிறது. அந்த விவரத்தை அறிவதற்கு அவர்கள் அங்கும் இங்குமாக அலைய வேண்டியுள்ளது; தூணுக்கும் கம்பத்துக்குமாக அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

இது போன்ற விடயங்களை உடனுக்குடன் கவனிக்க, கைது செய்தவர்களிடம் விவரம் அறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு அதிகாரம் உள்ள அல்லது தகுதி வாய்ந்த அமைப்பு எதுவும் இங்கு இல்லை.

அதனால் குடாநாட்டில் கைதான பலர் சில மாதங்களின் பின்னர் காணாமல் போனோர் பட்டியலிற் சேர்க்கப்படும் மிகவும் பயங்கரமான நிலை நிலவுகிறது.

இத்தகைய அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு மனித உரிமைகள் தேசிய ஆணைக்குழு மட்டும் போதுமா? இல்லை. அதன் பணி மாவட்டத்துக்கு மாவட்டம் பரவலாக்கப்பட வேண்டும்; அதன் கீழ் அதிகாரம் மிக்க அலகுகள் நிறுவப்படுவது அவசியம். போர் நடைபெறும் வடக்கு—கிழக்கின் சகல மாவட்டங்களிலும் அத்தகைய அலகுகள் உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

மனித உரிமைகள் தேசிய ஆணைக்குழு செயற்பட ஆரம்பிக்க முன்னரே இயங்கி வந்த மனித உரிமைகள் செயலணியின் பணியகத்தை மூடுவது எந்த விதத்திலும் பொருத்தமானது அல்ல; நியாயமற்றது.

இது விடயமாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு அரசு தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லையேல் மனித உரிமைகளைப் பேணுதல் வெறும் கறுப்பு வெள்ளையிலேயே இருக்கும்.

# பெரியமடுத்தாக்குதல்குறித்து முன்னரே எச்சரிக்கப்பட்டது!

## ‘ராவய’வெளியிடும் தகவல்கள்

கொழும்பு, ஜூலை 2

வவுனியா பெரியமடுவில் அமைந்திருந்த படையினரின் ஆட்லறி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தப் போகின்றார்கள் என்ற எச்சரிக்கைத் தகவல், தாக்குதல் நடைபெற்ற தினம் பகல் வேளையிலேயே இராணுவத்தின் உளவுப் பிரிவினால் இராணுவ முகாமுக்கு வழங்கப்பட்டிருந்தது என்ற தகவல் தற்போது வெளிவந்திருக்கின்றது.

இது தொடர்பாக இராணுவத்துக்குள்ளே கருத்து வேற்றுமைகள் உருவாகியுள்ளதாகவும் —

இந்தப் பொறுப்பற்ற செயலுக்கு யார் பொறுப்பு எனக் கண்டறிவதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது எனவும் —

"ராவய" சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது; இது குறித்து அப்பத்திரிகை மேலும் தெரிவிப்பதாவது:-

கடந்த 25 ஆம் திகதி இரவு 10.00 மணி அளவில் பெரியமடுவில் அமைந்திருந்த ஆட்லறி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இருநூறுக்கும் குறையாத படையினர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் —

சுமார் 100 படையினர் காணாமற்போயுள்ளனர் எனவும் —

காயமடைந்தோர் எண்ணிக்கை நானூறுக்கும் அதிகம் எனவும் —

கிடைத்துள்ள புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குலின் போது காயமடைந்த படைவீரர்களின் 124 பேர் வவுனியா இராணுவ முகாமில் அமைந்துள்ள மருத்துவ மனையிலும் 38 பேர் கொழும்பு மருத்துவ மனையிலும் 83 பேர் அனுராதபுரம் மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூவர் பின்னர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் லண்டன் பணிமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் ‘வெற்றி உறுதி’ இராணுவ நடவடிக்கையின் உச்சியில் அடிக்கும் தாக்குதல் இது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 150 பேருக்கு மேலே கொல்லப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புத் துறையினர் தெரிவிக்கின்றனர். ஆனால் தமது தரப்பில் 85 போராளிகளே பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்,

எமது வவுனியா செய்தியாளர் தந்துள்ள தகவல்களின்படி தாக்குதலுக்கு முன்னர் இராணுவத்தின் கவனத்தை வேறு திசையில் கவரும் நோக்கில் வவுனியாவிலுள்ள இராணுவ சமிக்ஞை நிலையத்தின் மீது தாக்குதலை மேற்கொள்ளத் தயாராகி வருவது போல் ஒரு ஊகத்தைப் புலிகள் ஏற்படுத்தச் செய்தனர்.

வவுனியாவின் தெற்குப் பகுதியிலுள்ள துடுவெவ,கெப்பிற்றிக்கொலாவ ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் குழுக்களாகப் பகிரங்கமாக நடமாடினர். மேலும் துடுவெவப் பகுதியில் சிறு தாக்குதல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

பெரியமடுத் தாக்குதலுக்கு முன்னர் இராணுவத்தினரை ஏமாற்றும் நோக்கில் முன்னேறிய படையினர் மீது கடந்த 24 ஆம் திகதி பகல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலின் மூலம் இராணுவத்தின் கவனத்தை முன்னேறிய பகுதியை நோக்கித் திசை திருப்புவதில் விடுதலைப்புலிகள் வெற்றிகண்டுள்ளனர்.

அன்றிரவு சுமார் 10.30 மணியளவில் ஆட்லறி, மோட்டார், ஆர். பி. ஜி. போன்ற கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பெரியமடு இராணுவ முகாம் மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டனர் எனவும்—

சுமார் ஆயிரம் போராளிகளைக் கொண்ட விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணி இரவு 1.30 மணியளவில் முகாமைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனவும்

எமது வவுனியாச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விமானத் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக கைப்பற்றி ஆயுதங்களுடன் இரவோடு இரவாக அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்தாக்குதலின் போது 120 மி.மீற்றர் பீரங்கி ஒன்று, அதற்குரிய எறிகணைகள் — 300, பேஸ் பிளேட் — 5, பல இராணுவ வாகனங்கள், பெருந்தொகையிலான இலகு ஆயுதங்கள் ஆகியன வற்றை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

‘வெற்றி உறுதி’ இராணுவ நடவடிக்கையில் இதுவரை சுமார் 450 படையினர் பலியாகியுள்ளனர். சுமார் ஆயிரம் படையினர் வரையில் காயமடைந்துள்ளனர்.

தரைவழிப் பாதையைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் ‘வெற்றி உறுதி’ இராணுவ நடவடிக்கையின் போது வவுனியாவிலிருந்து கிளிநொச்சிவரையான நெடுஞ்சாலையை முற்றிலுமாகக் கைப்பற்றுவதாயின் 72 கி. மீற்றர் தூரத்தைக் கடக்க வேண்டும். ஆனால் படையினரால் இதுவரை 22 கி.மீற்றர் தூரத்தை மாத்திரமே கைப்பற்ற முடிந்துள்ளது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம் ஜூலை 2

திருநெல்வேலி வட-கிழக்கு கிராம உத்தியோகஸ்தர் பிரிவுக்குட்பட்ட மக்களின் விசேட அடையாள அட்டை இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அப்பகுதிகிராமசேவையாளர் சி. தவராசா அறிவித்துள்ளார். (3)

## கலந்துரையாடல்

புன்னாலைக் கட்டுவன் பகுதி இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புன்னாலைக்கட்டுவன் பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 4.00மணிக்கு புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

மின்சாரம், வைத்திய சாலை, பாடசாலை, விவசாயம், போக்குவரத்து மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து இக் கலந்துரையாடலில் ஆராயப்படவிருப்பதால் இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-4)

# ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் பணிக்காலம் நிறைவு பெறுகின்றது

## ஒரு குழுவின் முன் 10,522 முறையீடுகள் நிலுவையில்!

கொழும்பு, ஜூலை 2

பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் பணிக் காலம் இம்மாத இறுதியுடன் முடிவுக்கு வரவிருக்கின்றன.

இதன் காரணமாக அந்த ஆணைக் குழுக்கள் தமது அறிக்கைகளைத் தயாரிப்பதில் துரிதமாக ஈடுபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் ஊழல் தொடர்பான ஆணைக் குழுவும் —

வடக்கு - கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை நடத்திய ஆணைக் குழுவும் —

அரச நியமனங்களில் இடம் பெற்ற ஊழல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக் குழுவும் —

தமது அறிக்கைகளை இம்மாத இறுதிக்குள் தயாரித்து விடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

தென் பகுதியில் ஜே.வி. பி. கலவரங்களின் போது காணாமற் போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் பணிக் காலம் இது தொடர்பான 10 ஆயிரத்து 522முறையீடுகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படு முன்னரே முடிவுற்றுள்ளது.

முறைப்பாட்டு மனுக்களை சமர்ப்பித்தோர் இதனால் கடும் சீற்றமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணி அளித்த தேர்தல் வாக்குறுதி இவ்வளவு விரைவாகக் காற்றில் அடித்துச் செல்லப்படும் எனத் தாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை என முறைப்பாடு செய்தோர் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் மத்தியில் உருவாகிவரும் எதிர் உணர்வலைகள் காரணமாக எஞ்சியுள்ள 10,522 மனுக்களை விசாரிக்கத் தனியான ஓர் ஆணைக்குழுவை நியமிப்பது தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## புள்ளிகள் அறிவிப்பு

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்களின் பெறுபேறு புள்ளிவிவரங்கள் அவரவர் பாடசாலைகளுக்கும்-

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் புள்ளிகள் அவர்களின் முகவரிகளுக்கும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் நேற்று கொழும்பில் தெரிவித்தது. (உ-3-10-150)

## நியமனம்

கைதடியைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரசாமி மற்றும் மூவர் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணையை நடத்தவுள்ள "ட்ரயல் அட் பார்" நீதிமன்றத்துக்கான மூன்று நீதிபதிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நிமால் திஸநாயக்கா, அன்ட்ரூ சோமவன்ஸ, காமினி அபயரட்ன ஆகியோரே அந்த மூன்று நீதிபதிகளும் ஆவார்.

எப்போது இந்த வழக்கு விசாரணை ஆரம்பமாகும் என அறிவிக்கப்படவில்லை. (உ-3-150)

# ஆசிரிய நியமனம் இனி வலய ரீதியில்?

கொழும்பு, ஜூலை 2

1996 மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஆசிரியர்களை ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் கல்வி வலய ரீதியாக அட்டவணைப் படுத்தப்பட்டு அந்தந்த வலயங்களில் உருவாகும் வெற்றிடங்களுக்கு அந்தந்த அட்டவணையில் அதிக புள்ளிகள் பெற்றவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது எனக் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான தீர்மானித்துள்ளதாகக் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நடைமுறையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது, நியமிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் தாங்கள் வாழும் பகுதிகளில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படுமென்றும் —

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பாகப் பிரச்சினை அதிகளவில் குறையும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றினர். பரீட்சைநடந்து ஓராண்டுக்கு மேலாகியும் பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை.

தற்போதுள்ள ஆசிரியர் பதவிக்கான வெற்றிடங்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற பரீட்சை முடிவுகளில் இருந்து நிரப்பப்படும் எனவும் —

இனி வரும் ஆண்டுகளில் ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதால் உருவாகும் வெற்றிடங்கள் அந்தந்தப் பகுதியில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் பெற்ற சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படும் எனவும் —

மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

## நாளை

**ஆனி 19**

**வியாழக்கிழமை**

திதி: சதுர்த்தசி

பின்இரவு 12.33 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பின் இரவு 2.00 வரை.

சுபநேரம்: 7.27- 8.57

ராகுகாலம்: 1.27-2.57

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## விமானத்தில் புகைக்கத் தடை

எயர்லங்கா நிறுவனம் அதன் விமானங்களில் புகை பிடிப்பதை நேற்றுத் தொடக்கம் தடை செய்துள்ளது. எனினும் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவை தொடர்பாக இந்தத் தடை நடைமுறைக்கு வராது என அறிவிக்கப்பட்டது. (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்)

மருதமடுவிலுள்ள அகதிமுகாமைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அகதிகளும் பேரணியில் வந்தவர்களுடன் இணைந்து கொண்டனர். அவர்கள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலக வாயிலில் வழி மறிப்புச் செய்தனர்.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கும் முகவரியிடப்பட்ட இரு மகஜர்கள் பேரணியில் சென்றோர் சார்பில் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

பேரணியில் மாட்டு வண்டி ஊர்வலமும் இடம்பெற்றது. (உ-164)


## வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் அரச அதிபராக
பதவியேற்றிருக்கும்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
புகழ்பூத்த பழைய மாணவரும்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க உப தலைவருமான

திரு. க. சண்முகநாதன் அவர்களை

பெருமையுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்,

யாழ். ஹிண்டுயிட்ஸ் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/1051)



உ
சிறீ காமாட்சி துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

யாழ். வண்ணை குளங்கரை மருதடி
ஸ்ரீ காமாட்சி அம்பாள்
தேவஸ்தானம்
(நாச்சிமார் கோயில்)

## பதவி வெற்றிடம்

1) குருக்கள்:

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் குருக்கள் தனது உதவியாளராக இருவரையும், பரிசாதகராக ஒருவரையும் சேர்த்து சுய விவரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும். தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். சம்பள விவரங்கள் நேரில் பேசித்தீர்த்துக் கொள்ளப்படும்.

2) நாதஸ்வர, தவில், வித்துவான்கள்:

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது சுயவிவரத்துடன் இருவருக்குமான மாதாந்தவேதனத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிகப்படிகள் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: **15—07—1997**

மேலதிக விவரங்களுக்கு தேவஸ்தானத்தில் தொடர்பு கொள்ளவும். அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கையெழுத்துப்பிரதி மூலமாகவே அமைதல் வேண்டும்.

தர்மகர்த்தா சபை

நாச்சிமார் கோயில்,
வண்ணார் பண்ணை. (48148)



## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

புதியபொலியுடன் புதிய நிர்வாகத்தின் கீழ்...
ஆண்டு 4 முதல் A/L வரையான வகுப்புகள்
மதிப்பீட்டுப் பரீட்சைகள்;
ஆண்டு 5க் கான விசேட பரீட்சைகள்
அனுமதி 3-7-97 வியாழன் பி. ப. 3-00 மணி
உங்கள் அனுமதியை உறுதி செய்து கொள்ளுங்கள்

(48152) நிர்வாகி



## விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் வின்சர் படமாளிகைக்கு அருகாமையில் 5 பரப்புக்காணி இரண்டு கடைகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-

விளம்பர இல. 637
மே/பா உதயன்
யாழ்ப்பாணம்.

(48154)


## தட்டுப்பாடு

நெடுந்தீவுப்பகுதியில் மாவுக்கும் மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

தனிப்பட்ட வர்த்தகர்கள் யாழ். நகரில் இருந்து மண்ணெண்ணெயைக் கொள்முதல் செய்து வந்து போத்தல் ஒன்று ரூபா 20 முதல் 25 வரை விற்பனை செய்கின்றனர். கூட்டுறவுக் கடைகளிலும் தனியார் கடைகளிலும் தமக்குத் தேவையான மண்ணெண்ணெய், கோதுமை மா என்பவற்றை வாங்க முடியாது மக்கள் கஷ்டமுறுகின்றனர்.

## 'சண்டே ரைம்ஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்)

ரிகையில் வெளியிட்டார் என்ற மற்றைய குற்றத்துக்கு ஏழு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனையும் 2ஆயிரத்து 500 அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத் தொகைகளைச் செலுத்தத் தவறினால் ஏழு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அடுத்து வரும் ஏழு வருட காலத்துக்குள் சிங்கரட்ணதுங்க வேறு ஏதேனும் குற்றத்துக்கு குற்றவாளியாகக் காணப்பட்டால் அவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஒன்றரை வருடச் சிறைத்தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்தை விட்டு வெளியேறும் போது தமது கைவிரல் அடையாளத்தை பதியுமாறு சிங்கரட்ணதுங்கவை நீதிமன்றம் நேற்று பணித்தது.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற 'பார்ட்டி' ஒன்றுக்கு நள்ளிரவுக்குப் பின் சென்று ஜனாதிபதி பங்குபற்றினார் என்று சாரப்பட தமது பத்திரிகையில் செய்திக் கட்டுரை வெளியிட்டமைக்காக சிங்கரட்ணதுங்க மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இத் தீர்ப்பினால் சிங்கரட்ணதுங்க தமது சட்டத்தரணி தொழிலை மேற்கொள்வதற்கான வாய்ப்பை இழக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தீர்ப்பை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்யப் பேவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4-21)


## விக்னா

கல்வி நிறுவனம்
ACCOUNTING
திரு. பாலவாசன்
A/L 98
சொத்து விற்பனை
ஆரம்பம்: 05-07-97
சனிக்கிழமை 2-00 P.m.

பொருளியல்
திரு. விக்கி
A/L 99
விலைக்கோட்பாடு
ஆரம்பம்: 05-07-97
சனிக்கிழமை 10-00 A m.

(48150)



## விக்னா

கல்வி நிறுவனம்
O/L கணிதம் சித்தியடையாத மாணவர்களின்
நலன் கருதி
யாழில் மீண்டும்!
கணிதம்
திரு. தயாளன்
ஆரம்பம்: 06-07-97
2-00 P.m.
(4815[illegible])


## 'கருணைக் கொலை' குறித்து பிரிட்டிஷ் டாக்டர்கள் ஆய்வு

லண்டன், ஜூலை 2

நோயாளிகள் சுயமாகவும் சுதந்திரமாகவும் விருப்பம் தெரிவிக்கின்ற சூழ்நிலையில் நடத்தப்படும் கொலையை சட்டபூர்வமுடையதாக மாற்றலாமா?

இது தொடர்பாக மருத்துவர்களின் கருத்து என்ன என்பதைக் கண்டறியும் வாக்கெடுப்பு இந்த வாரம் பிரிட்டனில் நடைபெறவுள்ள மருத்துவர் மாநாட்டில் நடத்தப்படும்.

சாகும் தறுவாயிலிருக்கும் நோயாளிகளின் சம்மதம் அறியாமல் செய்யப்படுவதனை கருணைக் கொலை எனவும் —

அவர்களின் விருப்பம் அறியப்பட்டு செய்யப்படுவதனை கருணைத் தற்கொலை எனவும் - மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

கருணைத் தற்கொலைக்கு சுமார் 51 சதவீத பிரிட்டிஷ் மருத்துவர்கள் ஆதரவு தெரிவிப்பதாக சென்ற ஆண்டு நடைபெற்ற ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. (இ-5)

## நாகாலாந்தில் 6 படையினர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான நாகாலாந்தில் பிரிவினைவாத கிளர்ச்சிக்காரர்களினால் 6 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாகாலாந்தின் கொகிமா மாவட்டத்தில் இராணுவத்தின் வாகனத் தொடர் ஒன்றின் மீது மறைந்திருந்து தாக்குதல் நடத்திய கிளர்ச்சிக்காரர்கள் பின்னர் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் எனத் தெரிவிக்கப் பட்டது.

இந்தத் தாக்குதலை நடத்தியதாக எந்தக் குழுவும் தெரிவிக்கவில்லை. ஆனால் என். எஸ் சி என். என்ற நாகாலாந்து தேசிய சோசலிஷ கவுன்ஸில் இந்தத் தாக்குதலில் தொடர்புபட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக இந்திய உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-4)

## மோசமான நிலையில் வீதி

யாழ்ப்பாணம், ஜூலை 2

கண்டி வீதியையும் கேரதீவு வீதியையும் இணைக்கும் தச்சந்தோப்பு ரயில் நிலைய வீதியின் ஒரு பகுதி திருத்தப்படாதநிலையில்கைவிடப் பட்டுள்ளது.

இந்த வீதியால் பிரயாணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

## பிரயாணிகள் கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

முல்லைத்தீவுக் கடற் பகுதியில் வைத்து 1995 இல் கடத்தப்பட்டு பின்னர் அழிந்து போன 'ஐரிஷ் மோனா' கப்பலும் இந்த நிறுவனத்துக்கே சொந்தமானது எனக் கூறப் படுகின்றது.

நேற்று எரிக்கப்பட்ட 'மிஷன்' கப்பல் முதலில் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

சுமார் ஐந்நூறு யயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய வசதிகள் இக்கப்பலில் இருந்த போதும், முந்நூறு பேரை மட்டுமே ஏற்றிச்செல்வதற்கு கடற்படையினர் அனுமதித்தனர். மன்னாரில் தங்கியுள்ள வடபகுதி அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி இறக்குவதற்காக கடந்த வாரமே இக்கப்பல் மன்னார் சென்றிருந்தது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறையில் அகதிகளை இறக்கி விட்டு, அடுத்த தடவை மீண்டும் மன்னாரில் இருந்து அகதிகளை ஏற்றி வருவதற்காக இக்கப்பல் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

இதே போன்று மன்னாரிலிருந்து அகதிகளை ஏற்றி வந்த காங்கேசனில் அவர்களை இறக்கிய 'தராகி' கப்பலும், இந்தக் கப்பலுக்கு பின்னால் மன்னாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது

காலையில் நேரத்துடன் மன்னாருக்கு நெருங்கிய கப்பல் — இறங்கு துறைக்குச் செல்வதற்கு கடற்படையின் அனுமதியை எதிர்பார்த்து— பேசாலையில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில் நங்கூரமிட்டிருந்தது.

வழக்கமாக காலை 10மணியளவில் இறங்கு துறையில் இருந்து படகுகளில் வரும் கடற்படையினர் கப்பலைப் பரிசோதித்த பின்னர் அதனை இறங்கு துறைக்குக் கூட்டிச் செல்வர். கடற்படையின் வருகையை எதிர்பார்த்துக் கப்பல் காத்திருக்க காலை 6-30 மணியளவில் ஐந்து படகுகளில் வந்த இனந்தெரியாதோர் கப்பலில் இருந்தவர்களை கைதுசெய்து தம்முடன் கொண்டு சென்றதுடன் கப்பலையும் தீயிட்டு எரித்தனர்.

தூரத்தில் இதனை அவதானித்த 'தராகி' கப்பல் கரைக்கு வராமல் ஆழ் கடல் வழியே தலைமன்னார் துறைக்கு விரைந்தது. எரிந்து கொண்டிருந்த 'மிஷன்' கப்பலை அணைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்றுப் போயின. இக் கப்பலின் பெறுமதி 4 லட்சம் அமெரிக்க டொலர்களாகும்.

இக் கப்பலின் நிறுவனத்துக்குச் சொந்தமான மற்றொரு கப்பலான 'நியூகோ எண்டுரன்ஸ்' கப்பல் நேற்று வரை காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்தது.

இக் கப்பல் எரிக்கப்பட்டதை அடுத்து கடல் வழி பயணிகள் போக்குவரத்து அனைத்தும் ஸ்தம்பித்தன.

வடபகுதிக்கு வருவதற்காக மன்னாரில் தற்போது தவமிருக்கும் சுமார் 4 ஆயிரத்து 500 வடக்கு அகதிகளும் இக்கப்பல் சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் வடக்கே வரமுடியாது தொடர்ந்து மன்னாரில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது;

கப்பலில் இருந்த சிப்பந்திகளை விடுவிக்கும் முயற்சியாக மேற்படி கப்பல் நிறுவனத்தினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

மன்னாரில் இருக்கும் அகதிகள் வடக்கிற்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து —

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து உயிலங்குளம் ஊடாக மன்னாருக்கு செல்ல முயற்சிக்கும் அகதிகளுக்கு உயிலங்குளம் தடை முகாம் படையினர் அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர். (உ-3-4-21-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org